செ.வெ.எண்:060 நாள்: 26.01.2016.

**நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 67-வது குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவித்து 166 பயனாளிகளுக்கு ரூ. 1,14,36,154 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 26.01.2016 அன்று நடைபெற்ற 67-வது குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி, காவல்துறை, ஊர்காவல் படை, தேசிய மாணவர் படை, சாரணியர் ஆகியோரது அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள், 14 சுதந்திர போராட்ட தியாகிகள், 5 மொழி காவலர்கள் ஆகியோர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார். காவல்துறையில் வீரதீர செயல் புரிந்த 15 தலைமை காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கங்களை வழங்கியும், இருப்புப்பாதை காவல்துறையில் வீரதீர செயல் புரிந்த 02 காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கங்களை வழங்கியும், பாராட்டுச் சான்றிதழ்களையும்,

வருவாய் துறையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 4 நபர்களுக்கு ரூ3.5 இலட்சம் மதிப்பிலான காசோலைகளையும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் வருடாந்திர பராமரிப்பு மான்யமாக தலா ரு.25 ஆயிரம் வீதம் 3 நபர்களுக்கு ரு. 75ஆயிரத்துக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கு தலா ரூ 5500 மதிப்பிலான முன்று சக்கர சைக்கிள் மொத்தம் ரூ.16,500 மதிப்பீட்டிலும்,பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மூலம் சிறப்பாக பணியாற்றியதற்காக அலுவலா் மற்றும் ஊழியர்கள் 31 பேருக்கு விருதுகளும்,தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 2 பேருக்கு பரிசுகளும்,கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் மூலம் சிறப்பாக பணியாற்றியதற்காக 21 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும்,

முதலமைச்சரின் சூரிய ஒளி சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் சார்பில் தலா ரூ. 2 இலட்சத்து 38 ஆயிரத்து 470 வீதம் 8 பயனாளிகளுக்கு ரூ. 19 இலட்சத்து 07 ஆயிரத்து 760 மதிப்பீட்டிலும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தலா ரூ. 1 இலட்சத்து 48 ஆயிரத்து 470 வீதம் 8 பயனாளிகளுக்கு ரூ. 11 இலட்சத்து 87 ஆயிரத்து 760 மதிப்பீட்டிலும் என 16 பயனாளிகளுக்கு ரூ. 30 இலட்சத்து 95 ஆயிரத்து 520 மதிப்பீட்டிலும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படும் அங்கன்வாடி பணியாளர்கள் 3 நபர்களுக்கு மாநில அளவிலான விருதுகளாக தலா ரூ. 5 ஆயிரம் வீதம் ரூ. 15 ஆயிரம் மதிப்பீட்டிலும், 2015-16 ஆம் நிதியாண்டில் முழுமையாக 100 சதவீதம் வரி வசூல் செய்தமைக்காக 3 ஊராட்சி செயலாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், குடும்ப நலத்துறையின் சார்பில் மூலம் சிறப்பாக பணியாற்றியதற்காக 21 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும்,

வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில் ரூ.75 ஆயிரம் மான்யத்திலான பவா்டில்லா் 1 பயனாளிக்கும், ரூ. 1 லட்சத்து 25 ஆயிரம் மான்யத்திலான டிராக்டர் 2 பயனாளிக்கும், ரூ. 30.00 மான்யத்திலான தென்னங்கன்று 1 பயனாளிக்கும், ரூ. 3000 மான்யத்திலான விசைத்தெளிப்பான் 1 பயனாளிக்கும் என 5 பயனாளிகளுக்கு ரூ.3 லட்சத்து 28 ஆயிரத்து 030 மதிப்பீட்டிலும்,வேளாண் பொறியியல் துறையின் சார்பில் உழுவை இயந்திரம் ( டா்ஃபே எம்.எப்7250) தலா ரூ. 6 இலட்சத்து 37 ஆயிரம் வீதம் 2 பயனாளிகளுக்கும், நெல் நடவு இயந்திரம் தலா ரூ. 12 இலட்சத்து 95 ஆயிரம் வீதம் 2 பயனாளிகளுக்கும் 4 பயனாளிகளுக்கு ரூ. 38 இலட்சத்து 64 ஆயிரத்து 800 மதிப்பிலும் , கூட்டுறவுத் துறையின் சார்பில் சுழல் நிதியாக தலா ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், சேமிப்புடன் இணைந்த கடன் தொகையாக தலா ரூ. 80 ஆயிரம் வீதம் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், தலா ரூ.1 லட்சம் வீதம் 2 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், மொத்தம் ரூ. 8,10,000 மதிப்பீட்டிலும்,

வருமானம் ஈட்டும் தாய் தந்தையரை இழந்த அல்லது நிரந்தர முடக்கம் அடைந்த அவர்தம் குழந்தைகளுக்கு தொடர்ந்து கல்வி பயில தமிழக அரசின் நிதி உதவியாக 10 நபர்களுக்கு ரூ.50000 வீதம் மொத்தம் ரூ.500,000 மதிப்பீட்டிலும், மாவட்ட தொழில் மையம் மூலமாக தொழில் தொடங்க கடனுதவியாக 4 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.14,87,000

மதிப்பீட்டிலும், தாட்கோ மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.6லட்சத்து75 ஆயிரத்து 064 மதிப்பீட்டிலும்,தொடக்கக் கல்வித்துறையின் மூலம் சிறந்த தனியார் மற்றும் அரசு மற்றும் ஊராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளுக்கான சுழல் கேடயங்கள் 3 பள்ளிகளுக்கும்,நாகப்பட்டினம் நகராட்சியின் சார்பில் சுழல் நிதியாக 4 குழுக்களுக்கு தலா ரூ10000 வீதம் ரூ. 40000 ஆயிரத்துக்கான காசோலைகளையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு தலா ரூ. 51,240 மதிப்பீட்டிலும், 1 பயனாளிக்கு தலா ரூ. 52,000 மதிப்பீட்டிலும் 1 பயனாளிக்கு ரூ. 40ஆயிரம் மதிப்பீட்டிலும் சொட்டுநீர் பாசன கருவிகளும், 1 பயனாளிக்கு ரூ36000 மதிப்பிலான மாங்கன்றுகளும் மொத்தம் 4 பயனாளிகளுக்கு ரூ. 1இலட்சத்து 79 ஆயிரத்து 240 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நீடுர் தீன் கலை அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம் இ.ஜி.எஸ். பிள்ளை கலை அறிவியல் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி கலை அறிவியல் கல்லூரி நாகப்பட்டினம், பொறையார் டி.பி.எம்.எல் கலை அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம் ADM மகளிர் கல்லூரி, மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலை அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, செம்பனார்கோவில் கலைமகள் கலை அறிவியல் கல்லூரி, உள்ளிட்ட பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் சாகச நிகழ்ச்சிகளும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி(குறிச்சி),ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி(காடம்பாடி) , ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி(திருக்குவளை), ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி(வேளாங்கண்ணி) ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் கராத்தே நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

முன்னதாக காவல்துறை கமாண்டர்கள் திரு.வைரமூர்த்தி(ஆய்வாளர்),திரு.சுப்பையா(உதவி ஆய்வாளர்), திரு.ஆனந்தராஜ்(உதவி ஆய்வாளர்),, திரு.ராஜா(உதவி ஆய்வாளர்) ஆகியோரது தலைமையில் காவல்துறையினர் அணிவகுத்துச் சென்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அபிநவ் குமார், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.இராமசாமி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது ) திரு.ராஜசேகரன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.க.நாகேந்திரன் நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஜெயராஜ் நகரமன்றத் தலைவர் திருமதி. மஞ்சுளா சந்திரமோகன், ஊர்காவல் படை தளபதி திரு.ஆனந்தன், வட்டாட்சியர் திரு.இளங்கோவன் அரசு அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு :-

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகப்பட்டினம்.